பாக மருத்துவ வசதி, கல்வி வசதி உள்ளன என்பது உடல் ஊனமுற்றவர்களுக்கு சரிவர விளக்கப்படுவதில்லை என்று உடல் ஊனமுற்றவர்கள் சொல்கிறார்கள். அது உண்மையா? உண்மையெனில் இதை நிவர்த்தி செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் திட்டத்திலும், கல்வித் திட்டத்திலும் உடல் ஊனமுற்றவர்கள் அதற்கு விண்ணப்பம் அளித்திருந்தால் முதல் அடிப்படையில் அவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் பல ஆண்டுக் கணக்கில் கை வண்டிக்காக காத்திருக்கிறார்கள். அவ்வாறு தங்களுடைய வேலை வாய்ப்புக்காக வண்டிக்காக, காத்திருக்கிறவர்கள் மற்றும் காலிபர்ஸ் (Calipers) போன்றவற்றுக்காக காத்துக் கொண்டிருப்பவர்கள் நலன் கருதி அரசு உடனுக்குடன் அந்த நபர்களுக்கு கை சக்கரங்கள் வழங்கவும், காலிபர்ஸ் வழங்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கடந்த ஆண்டுகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடன், கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கூட பரிசீலனை செய்யப்பட்டு, உடனுக்குடன் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 213, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

213—

அரசுத் துறைகளில் 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

*3877 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசின் எல்லாத் துறைகளிலும் 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1992 மார்ச் 13]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சிகள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 விழுக்காட்டை ஏற்கனவே முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில் அதில் ஏதாவது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 201 அரசுத் துறைகளில், அரசுத் துறை நிறுவனங்களில் 130 துறைகளிடமிருந்து பதில் வந்துள்ளது. இதன்படி 2,657 பெண்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பீட்ரிக்ஸ் டி. சோசா.

Dr. BEATRIC D'SOUZA : Hon. Speaker, Sir, will the Hon. Minister for Social Welfare relax the age limit to give priority to certain categories of women—destitute women, single mothers and young widows—who need employment?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உடல் ஊனமுற்ற பெண்களுக்கு அந்தச் சலுகை இருக்கிறது. மற்றவர்களுக்கு மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 214, திரு. கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

214—

சத்துணவு அமைப்பாளர்களை ஆசிரியர்களாக நியமித்தல்.

*5072 திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: